www.tamilarangam.net

ஈழநாடு 9-3-77

# இலங்கைத் தமிழரை அழிப்பதற்காக 'இந்து' பத்திரிகை தலையங்கம் எழுதவில்லை

## ஆசிரியர் கஸ்தூரி ஈழவேந்தனிடம் வருத்தம்

### --- நமது நிருபர் ஐயா. சச்சிதானந்தம் ---

[யாழ்ப்பாணம்]

''இலங்கையில் மீண்டும் ஒரு இரத்தக்களரி ஏற்படுத்துவதை தடுக்கவே, இலங்கைத் தமிழரது நிலை குறித்து 'இந்து' பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் தீட்டியது. இவை இலங்கைத் தமிழரை அழிப்பதற்காக எழுதப்படவில்லை. அப்படி எமது ஆசிரிய தலையங்கம் தமிழ்மக்களது மனநிலையை புண்படுத்தியிருக்குமாயின் எமது தவறுக்காக வருந்துகிறோம்''.

இவ்வாறு இந்துப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. எஸ் கஸ்தூரி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைத்தலைவர் திரு. ஈழவேந்தனிடம் தெரிவித்துள்ளார். இத்தகவலை திரு. ஈழவேந்தன் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

திரு. ஈழவேந்தன் 'இந்து' பத்திரிகைஆசிரியரை சென்னையில் நேரில்சந்தித்து இலங்கைத் தமிழரது நிலை குறித்து அப்பத்திரிகை எழுதிய 10 ஆசிரிய தலையங்கங்கள் பற்றி கேள்வி எழுப்பியபோதே திரு. கஸ்தூரி மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டாராம்.

திரு. ஈழவேந்தன் 'இந்து' பத்திரிகையின் ஆசிரியருடன் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் உரையாடிய போது வரைபடங்களின் உதவியுடன் ஈழத்தமிழரது நிலை குறித்து விளக்கினார்.

இலங்கையில் தமிழர்கள் மிகவும், பாரபட்சமான முறையில் நடாத்தப்படுவதாகவும், தமது இறைமையை மீட்பதற்கு இலங்கைத் தமிழ்மக்கள் போராடிவரும் வேளையில் 'இந்து' பத்திரிகை அவர்களுக்கு விரோதமாக ஆசிரிய தலையங்கம் வெளியிட்டு தமிழ் மக்களின் மனநிலையை புண்படுத்திவிட்டதாகவும் திரு. ஈழவேந்தன் திரு. கஸ்தூரியிடம் தெரிவித்தாராம்.

### அமிரின் வரவை எதிர்பார்க்கிறோம்

இதற்கு திரு கஸ்தூரி பதிலளிக்கையில், இலங்கைத் தமிழரது நிலை குறித்து விரிவாக அறிவதற்கு தாங்கள் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் வரவை எதிர்பார்த்திருப்பதாகவும், அவரிடமிருந்து பலதகவல்களை அறிந்து மேலும் பல ஆசிரியத் தலையங்கங்கள் தீட்டவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கை அரசு, தமிழர்களுக்கு நன்மை செய்வதாக உலக அரங்கிற்கு எடுத்துக் காட்டுவதற்காக 'இந்து' பத்திரிகையின் தலையங்கங்களையெல்லாம் ஒன்று திரட்டி தகவல் திணைக்களத்தின் செலவில் அரசு நூலாக வெளியிட்டு இலவசமாக மக்களுக்கு விநியோகம் செய்துவருவதையும், திரு. ஈழவேந்தன், திரு. கஸ்தூரியின் கவனத்திற்குக் கொண்டு வந்தாராம்.

### கருணாநிதியுடன் சந்திப்பு

தமதுஇந்தியவிஜயம்குறித்து திரு. ஈழவேந்தன் நமது நிருபரிடம் மேலும் கூறியதாவது;

''திராவிட முன்னேற்றக்கழகத்தலைவரும், தமிழக எதிர்க்கட்சித்தலைவருமான திரு. மு. கருணாநிதியை, சென்னையிலுள்ள தமிழக சட்டசபை எதிர்க்கட்சித்தலைவரது காரியாலயத்தில் சந்தித்தேன்.

திரு. அமிர்தலிங்கம் எப்போது தமிழகம் வருவார் என்பதைக் கேட்டறிந்து கொண்ட திரு. கருணாநிதி, இலங்கைத் தமிழரது நிலை குறித்து தமதுஇயக்கஏடுகளில் செய்தி வெளியிட்டால், இலங்கை அரசு எமது ஏடுகளை இலங்கைவருவதைத் தடை செய்யலாமெனவும் கருத்து வெளியிட்டார்.

திமுக இயக்க ஏடுகள் இலங்கைக்கு வர்த்தக நோக்கோடு வருவதில்லை. எனவே இலங்கை அரசு, திமுக ஏடுகளை தடைசெய்தாலும், வெளியுலகிலுள்ள தமிழ் மக்கள் இலங்கைத்தமிழ்மக்களை எதிர்நோக்கும்பிரச்னைகளை பூரணமாக அறிவதற்கு எழுதுங்கள் என்றுஅவரிடம் கூறினேன்.

### தொண்டமானின் மந்திரிப்பதவி

திமுக பொதுச் செயலாளர் திரு. அன்பில் தர்மலிங்கத்தையும் சந்தித்தேன்.

'இ தொ காங்கிரஸ்தலைவர் திரு எஸ் தொண்டமான், கிராமிய கைத்தொழில் அமைச்சர் பதவி எடுத்ததுபற்றி திரு. அன்பில் தர்மலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், தொண்டமான் எனதுஉறவினர். ஆனால் மந்திரிப்பதவி எடுத்ததால் முழுஇலங்கைத் தமிழினத்துக்கும் பெருத்த அவமானத்தை ஏற்படுத்தியுள்ளார். அவர் இங்கு வந்து எனக்கும், திரு கருணாநிதிக்கும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் சம்மதத்துடன் மந்திரிப்பதவி ஏற்கப்போவதாகக் கூறினார், ஆனால் இதைநாம் ஏற்கவில்லை என்று கூறினார்.

''இந்தியக்காங்கிரஸ், ஜனதா காமராஜ் காந்தி தேசிய காங்கிரஸ், அ இ அ தி மு க ஆகியகட்சி உறுப்பினர்களையும், சிலம்புச்செல்வர் ம பொ சி, இரா நெடுஞ்செழியன் ஆகிய தலைவர்களையும் சந்தித்தேன்.

### 100க்கு அதிகமான சொற்பொழிவுகள்

ஒரிஸா, அலகாபாத், அடையாறுதொழில்நுட்பக்கல்லூரி, கோயம்புத்தூர், கேரளம், திருச்சி சட்டத்தரணிகள் சங்கம், சென்னை பொதுநூலகம், தஞ்சாவூர் தமிழ்ச் சங்கம், திருவையாறு அரசகல்லூரி, சென்னை, புதுச்சேரி அரவிந்தர் தனித்தமிழ்கழகம் மதுரை, சென்னை தமிழக ஈழநட்புறவுக் கழகம், தமிழ் நாடு இசையியல் கல்லூரி, மதுரை திருவள்ளுவர் கழகம் போன்ற இடங்களில் 100க்கு அதிகமான சொற்பொழிவுகளை திரு. ஈழவேந்தன் நிகழ்த்தி திரும்பியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம், 19-ம் திகதி, உலக இந்து மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்ற திரு. ஈழவேந்தன் சுமார் 45 தினங்கள் வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் இலங்கைத் தமிழர் நிலைகுறித்து விளக்கியதுடன் பல தமிழக - ஈழ நட்புறவுக் கழகங்களையும் ஆரம்பித்துவைத்தார்.

ஆனந்தவிகடன், குமுதம் இதயம் பேசுகிறது ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்களை சந்தித்து, இலங்கைத் தமிழ் மக்களது நிலை குறித்து கருத்துக்களை வெளியிடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். [கெ-இ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்